# மன்னார்குடி நகராட்சி

## அவசரகூட்டம்

நிகழும் பிலவ வருடம் புரட்டாசி மாதம் – 13–ஆம் தேதி (2021–ஆம் வருடம் அக்டோபர் 01–ஆம் தேதி வெள்ளி கிழமை காலை 10.20 மணிக்கு நகராட்சி அலுவலக வளாகத்தில் அவசரகூட்டம் நடைபெறும். அது சமயம் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலினைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

### பொருள்கள்

| | | |
|---|---|---|
| பொருள் எண்.1 | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் மின்னஞ்சல் கடிதத்தில், மன்னார்குடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மின்விளக்கு இல்லாத மின்கம்பங்களில் புதிய மின்விளக்குகள் பொருத்தும் பணிக்கு மதிப்பீடுகள் தயார் செய்து சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>அதன்படி, மன்னார்குடி நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளில் உள்ள மின்விளக்கு இல்லாத மின்கம்பங்களில் புதிய மின்விளக்குகள் பொருத்தும் பணிக்கு ரூ.33.10 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.<br>எனவே மேற்கண்ட பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.33.10 இலட்சத்திற்கான பணிக்கு முழு மான்யத்துடன் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(ந.க.எண்.5210/2021/இ1) | தீர்மான எண் .1475<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண்.2 | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் மின்னஞ்சல் கடிதத்தில், மன்னார்குடி நகர் பகுதியில் உள்ள சமுதாய கழிவறைகளை பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.6.67 இலட்சம் ஒதுக்கீடு செய்து அதற்குரிய மதிப்பீடுகள் தயார் செய்து சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. | தீர்மான எண் .1476<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அதன்படி, மன்னார்குடி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 கீழபத்ம சாலவர் தெரு கழிவறையை பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.3.25 இலட்சத்திற்கும், வார்டு எண்.16 செங்குளக்கரையில் உள்ள கழிவறையை பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.3.50 இலட்சத்திற்கும் இரண்டு கழிவறைகள் தேர்வு செய்யப்பட்டு, மொத்த மதிப்பீடுகள் தொகை ரூ.6.75 இலட்சத்திற்கு விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு முழு மான்யத்துடன் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(ந.க.எண்.5211/2021/இ1) | |
| பொருள் எண்.**3** | மன்னார்குடி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.32 ஆர்.பி.சிவம் நகர் புல்பண்ணையில் கசடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்.26888/UGSS2/2018 நாள்.12.11.2018 வாயிலாக ரூ.310.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 14.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, MSG Infrastructure, கோவில்வேனி என்ற நிறுவனத்திற்கு 09.03.2019 அன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளது.<br><br>தற்போது பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்கு, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் செயல்படுத்துவதற்கான ஒப்புதல் (CTO) பெறுவதற்கான கட்டணம் ஆண்டிற்கு ரூ.43,500/- வீதம் ஐந்து ஆண்டிற்கு செலுத்த தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில், ஒரு ஆண்டிற்கு ரூ.43,600/- ICICI வங்கி வரைவோலை எண்.501946 நாள்.09.08.2021 வாயிலாக செலுத்தப்பட்டுள்ளது. தற்போது மீதமுள்ள 4 ஆண்டுகளுக்கு உள்ள தொகையை செலுத்த District Environment Engineer, TNPCB, நாகப்பட்டிணம் அவர்களின் கடிதம் ந.க.எண்.DEE/TNPCB/NPM/Industries/2021 நாள்.30.09.2021ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. | தீர்மான எண் **.1477**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | எனவே மேற்படி கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு ரூ.1,73,900/- District Environment Engineer, TNPCB, நாகப்பட்டிணம் அவர்களுக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு :- 1. மேற்கண்ட செலவினத்தை திட்டநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி மன்ற முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>(ந.க.எண்.5466/2018/இ1) | |
| பொருள் எண்.**4** | நகராட்சிகளில் “நமக்கு நாமே திட்டம்” செயல்படுத்துதல் குறித்து வெளியிடப்பட்டுள்ள அரசு ஆணை எண்- 71 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (N.S) நாள்- 13.09.2021 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு- 1. பதிவு செய்யலாம்.<br>2. அரசாணையில் வழங்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி அரசு மான்யம் வரப்பெறுவதை பராமரித்திட ஒரு சேமிப்பு கணக்கும், பொது மக்களின் பங்களிப்பினை பெறுவதற்கு ஒரு சேமிப்பு கணக்கும் புதிதாக துவங்கிடவும் அனுமதிக்கலாம். | தீர்மான எண் **.1478**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண்.**5** | நகராட்சிகளில் “சாலைகள் நகர்புற மேம்பாட்டு திட்டம்” என்ற புதிய திட்டம் செயல்படுத்துதல் குறித்து வெளியிடப்பட்டுள்ள அரசு ஆணை எண்-70 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (N.S) நாள்- 13.09.2021 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு- பதிவு செய்யலாம். | தீர்மான எண் **.1479**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| பொருள் எண்.6 | மன்னார்குடி நகராட்சிக்குட்பட்ட வார்டு 1 பிளாக் 61 நகர அளவை எண். 4021ல் 1796.50 சதுர மீட்டர் பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப் பிரிவுக்கு துணை இயக்குநர் / உதவி இயக்குநர் (உ.பொ) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களின் ந.க.எண். 132/2021/TVR நாள்- 02.03.2021-ன் வாயிலாக சாலை அமைப்பு, வரைப்படம் அங்கீகரிக்கப்பட்டு, வரைபடத்தில் உள்ளவாறு மனுதாரர் திரு. மாரியப்பன் அவர்கள் உத்தேச மனைப்பிரிவிற்கான சாலை, மூலை முடக்கு கழிவு நீர் வாய்க்கால் மற்றும் தெரு விளக்கு ஆகியவற்றின் சொந்த செலவில் அமைத்து தர உத்திரவிடப்பட்டுள்ளது.<br>மேற்கண்ட நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய பதிவு தொகை ரூ. 2,400/- மற்றும் மதிப்பீடு தொகை ரூ. 57,630/-யை ரசீது எண். 5586273 நாள்- 06.08.2021-ன் வாயிலாக செலுத்தியுள்ளார். பகிர்மான குழாய்களுக்கான மதிப்பீட்டு தொகை ரூ. 36,000/-யை நகராட்சிக்கு பற்று சீட்டு எண். 102/01/1/21-22/000443 நாள்- 20.07.2021-ன் வாயிலாக செலுத்தியுள்ளார். நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் அவர்களின் கடிதம் எண். 132/2021/TVR நாள்- 02.03.2021-ல் உள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடத்தினை நகராட்சிக்கான பத்திர எண். 3953/2021 நாள்- 08.2021-ன் வாயிலாக ஒப்படைப்பு செய்துள்ளார்.<br>எனவே, மேற்கண்ட பத்திர பதிவு மூலம் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்ததை ஏற்று மேல் நடவடிக்கை தொடர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | தீர்மான எண் .1480<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண்.7 | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் மின்னஞ்சல் கடிதத்தில், மன்னார்குடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குளங்களை மேம்படுத்துவதற்கு, மதிப்பீடுகள் தயார் செய்து சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>அதன்படி, மன்னார்குடி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19 ல் (வருவாய் வார்டு 1 பிளாக் 47 நகரளவு எண். 2559/1A1) அமைந்துள்ள தாமரைக்குளத்தினை மேம்பாடு செய்திட ரூ.100.00 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. | தீர்மான எண் .1481<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | எனவே மேற்கண்ட பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.100.00 இலட்சத்திற்கான பணிக்கு முழு மான்யத்துடன் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(ந.க.எண்.5305/2021/இ1) | |

**(ஒ/ம்) கா. சென்னுகிருஷ்ணன்,**
**தனி அலுவலர்**
**மன்னார்குடி நகராட்சி**

**/ உண்மை நகல் /**

**ஆணையர்,**
**மன்னார்குடி நகராட்சி**